# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com


**9 வயதுப்பிரிவு**
(01.01.2008 – 31.12.2008 வரையில் பிறந்தோர்)

## நாம் அறிந்த நாட்டுப்பற்றாளர்

தாய்நாட்டின் மீதும், தாய்மொழி மீதும் அளவிட முடியாத பற்றுக் கொண்டு தாங்கள் வாழ்கின்ற காலத்தில் அளப்பெரும் பணிகள் செய்து சாவை அணைத்துக் கொண்டவர்களை நாட்டுப்பற்றாளர்களாக மதிப்பளித்துப் போற்றியவர் தலைவர் மாமா. தமிழீழ விடுதலைப் போராட்டம் வரித்துக் கொண்ட இலட்சியத்தில் உறுதி கொண்டவர்களாக அதன்பால் நின்றதால் ஏற்பட்ட வலிகளைத் தாங்கியவர்களாகத் தம்மை நிலைநிறுத்திப் பணியாற்றியவர்கள் நாட்டுப்பற்றாளர்கள்.

அவ்வகையில், எம்மோடு வாழ்ந்து நாம் அறிந்த நாட்டுப்பற்றாளர்களுள் ஒருவராக விளங்குபவர் நாட்டுப்பற்றாளர் கருணாநிதி மாமா. இவர், தமிழீழத்தின் வடபால் அமைந்துள்ள மீசாலையில் ஆயிரத்துத்தொள்ளாயிரத்து அறுபதாம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் பதினேழாம் நாள் மார்க்கண்டு மகேஸ்வரி இணையரின் மகனாகப் பிறந்தார். இளமையிலேயே திறமையும் நாட்டுப்பற்றும் நிறையப்பெற்றவராய் வளர்ந்து, கல்வியிலே சிறந்து விளங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் சிறப்புப்பட்டதாரியாக வெளியேறினார்.

அது ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து மூன்றாம் ஆண்டு காலப்பகுதி. எம் தேசம் எங்கும் இனவாதம் தலைவிரித்தாடிய காலம். தமிழர்களுக்கு விடுதலையின் அவசியத்தை உணர்த்திக் கொண்டிருந்த காலம். தமிழர்கள் உயிர்த்தஞ்சம் கோரிப் புலம்பெயரத் தொடங்கிய காலம். அதற்குக் கருணாநிதி மாமாவும் விதிவிலக்கல்ல. தேசத்தின் வாசத்தைச் சுமந்தபடி சுவிஸ் நாட்டில் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். வாழிட நாட்டிலே தமிழ்ச்சிறார்களின் தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து, உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கல்விச்சேவையால் நடாத்தப்படும் பள்ளிகளுக்கான செங்காளன் மாநில இணைப்பாளராகத் தாய்மொழிக்கான தனது பணியை ஆரம்பித்தார்.

இவரது உயர்ந்த சிந்தனை, நிர்வாகத்திறன் என்பவற்றால் இவர் கல்விச்சேவையின் தேர்வுக்குழுப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அமைதியான பேச்சும் ஆளுமையும் கொண்ட இவரின் சேவைக்காலத்தில் கல்விச்சேவை தனது ஆணிவேரை ஆழமாகப் பதித்துக் கொண்டது. யாரும் எதிர்பார்த்திராத வேளை, கல்விச்சேவைப் பணிக்காகச் சென்ற போது காலன் இவர் உயிரைப் பறித்துக் கொண்டான்.

இன்று வளர்ந்து நிமிர்ந்து நிற்கின்ற தமிழ்க்கல்விச்சேவை, எங்கள் மாமாவை இழந்து பதினைந்தாம் ஆண்டின் நினைவுகளை நன்றியோடு மீட்டிக் கொள்கிறது. எங்கள் மாமாவின் நினைவோடு தாய்மொழிக்கல்வியை வளர்த்தெடுப்போம்.

நன்றி,

வணக்கம்.